**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**20 |
| Name | : | **மகாலெட்சுமி** |
| Husband Name | : | **பன்னீர்செல்வம்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 38/2025 |

**தேதி : 15.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். அ.சா.15 முதல் அ.சா.19 வரை தெரியும். எதிரி எனது பக்கத்து வீட்டில் வசித்து வந்தார். எதிரி ஏற்கெனவே எனக்கு இரண்டு முறை லோன் வாங்கிகொடுத்துள்ளார். எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக கடன் வாங்கி தரச்சொன்னார். ரூ.40,000/-ஐ துறையூரில் உள்ள ஆசிர்வாத் என்ற தனியார்நிதிநிறுவனத்திடமிருந்து கடனாக பெற்றுக்கொடுத்தேன். எதிரி சில தவணைகள் மட்டும் திரும்ப செலுத்திவிட்டு தலைமறைவாகிவிட்டார். நிதி நிறுவன ஊழியர்கள் என்னிடம் வந்து மீதமுள்ள தவணை தொகைகளை செலுத்த கேட்டபோதுதான் எதிரி இதேபோல் நிறைய பேரிடம் கடன் வாங்கிகொண்டு தவணை தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்த விவரம் தெரிந்துகொண்டேன். எதிரி என்னிடம் 1 பவுன் தோடு, மோதிரம் வாங்கினார்.

மேற்படி நகைகளை எதிரி தனது கடன்களை அடைப்பதற்காக வாங்கியிருந்தார். எதிரி அடகு வைத்த நகையை நான் என்னுடைய சொந்த பணத்தில் மீட்டுக்கொண்டேன். இதேபோல் ஏமாற்றப்பட்ட சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். அவருடன் புகார் கொடுக்க நானும், மற்றும் 30 பேர்களும் சென்றிருந்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

எதிரி வசந்தியும் நானும் ஒரே ஊர். வசந்தியை எனக்கு 7, 8 வருடமாக தெரியும். எதிரி ஏற்கெனவே எனக்கு லோன் வாங்கிகொடுத்துள்ளாரா என்றால் இல்லை. இதுதான் முதல்முறை. எதிரியின் மாமைனாருககு உடல்நிலை சரியில்லை என்று கடன் வாங்கி கொடுக்க சொன்னார். ரூ.40,000/- லோன் வாங்கி கொடுத்தேன். எதிரி சரியாகத்தான் தவணைகளை கட்டிவந்தார் என்றாலும், நாங்கள் 39 பேரும் ஒரே நேரத்தில் சென்று பணம் கேட்டதால் தவணை தொகையை எதிரியால் கட்டமுடியவில்லை என்றால் சரியல்ல. எதிரி ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைகளை திரும்ப செலுத்தினால் வாங்கிகொள்வோம். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.